பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

மார்ச் 2020



## விரைவில் வெளிவரவிருக்கும் நூல்கள்










நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்®

தோற்றம் 1972 | மார்ச் 2020

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
அமின் மொஹமெட்
*இணையாசிரியர் :*
முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி
*நிர்வாக ஆசிரியர் :*
சஃபி மொஹமெட்
*ஆசிரியர் குழு :*
ஹிப்ஸுர் ரஹ்மான்
நெல்லை உலகம்மாள்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிஞர் பாலமுனை பாறூக்
*ஆலோசகர்கள் :*
பாட்டரசர் கி. பாரதிதாசன்
கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# வெண் பாவே வாவா



- கடலோரம் வாங்கிய காற்றோ எனக்குள்
உடலோடு மெல்ல உறவாய்நீ வாவா
மனத்திலே ஏதோ மயக்கம் தரஎன்
கனத்த இதயம் கனிந்து?!!!

- கனிந்த இதயமது காதல் கொளத்தான்
இனித்த உறவாய் இதம்சேர்க் - கனியின்
சுவையாய் நிறைந்த சுகமான  தென்றல்
அவையும் நிறைத்ததோ ஆங்கு

- ஆங்குதான் வந்ததோ அந்ததென் றலும்சரி
ஏங்கிய உள்ளம் எழிலாக - ஈங்கிவள்
தாங்கிய துன்பம் தமிழால் தணிந்திட
வாங்கிய காற்றுடன் வந்து?

- வாவென்றேன் தென்றலை வந்தது வீசியது
தாவென்றேன் தங்கியது தந்தது - நோவென்று
நின்றேன் தயங்கியே நீஏன் விலகியேச்
சென்றாய் வியர்த்திடச் செய்து

- செய்யும் தொழிலைநான் சேர்த்து மறந்தேனே
பொய்கூறா உள்ளமாய் பேசிய - மெய்யில்
நீவிழுந்த காலை நிலை கெடவும் போனேனே
பூவிரிந்த அல்லியுமாய் பூத்து

- பூத்த விழிகள் புதுமையே காணீரே
நேத்துவந்த நன்நேரம் நெஞ்சினிக்க - சாத்தும்
கதவாய்த் திறந்திட கண்ணீர் உகுக்கும்
இதமென நானும் இனித்து

கவிஞர் தென்றல் கவி

# பூத்திட்டப் பாவையிவள்

## பரணி சுப சேகர்



வான்பார்க்கும் வேல்விழிகள்
நான் பார்க்கக் காத்திருந்தேன்
தேன்சொல்லைத் தேடித் தேடி
தேவைதனை தேடிவந்தேன்

கருப்புநிலாப் பொட்டுக்குள்ளே
காவியத்தை நான் ரசித்தேன்
விருப்பமனம் விவரமாக
விளக்கிடவே நான்முனைந்தேன்.

தோகைமயில் இறகுபோல
வாகை சூடிய அழகுமகள்
சிகைத்தோகை சிறகடிக்க
சித்திரமாய் நின்றாளோ..

காந்தவிழி பார்வை கண்டு
கதிகலங்கிய கதிரவனும்
சாந்தமது மனம்கொண்டு
சமத்துவமழை தந்திருக்க

நீந்தும் மீனிரண்டு நீள்விழியாகிடவே
ஏந்திய அழகுக்குள் ஏற்றிய தீபமாக
மாந்தீரிகப் பார்வையாலே தினம்
மையலுறச் செய்பவளை..

படித்துப் படைத்தானோ.. பரமப் பேரழகை
வடித்து எடுத்தானோ வண்ணச் சிலையாக
பிடித்த வரவாக்கி பெருமைக்குள் நின்றவளை
எடுத்த வரமாக்கி தன்தவம் முடித்தானோ.

செங்கமல இதழ்களிங்கே செம்மொழி பேசியதோ
தங்கிடவே வந்த தமிழ் தரணிமுடி சூடியதோ
பொங்கிடும் நல்லழகாலே பூத்திட்டப் பாவையிவள்
மங்கலமாய் வாழட்டும்.. மனதார வாழ்த்திடுவோம்..

# இணைந்திருங்கள்

நீங்கள் ஒரு சவாலை சந்திக்கத் தயாராக இருக்கிறீர்களா... உண்மையை சொல்லப் போனால் இது உங்களுக்கு மட்டுமான சவால் அல்ல. ஒட்டுமொத்த நம் சமுகத்துக்கானது. நம் அனைவரின் வளர்ச்சிக்கானது. அதாவது போட்டி போடுவதற்கு போட்டி போட்டு பழகிக் கொண்டிருக்கும் நாம், நம் சமுகத்தோடு, ஒன்றுபட்டு உழைத்து, இணைந்து வெற்றி பெற்று, மகிழ்ச்சியோடு பகிர்ந்து வாழ பழகி பார்க்கலாமா?

பெரும்பாலும் யாரோ ஒருவரை சீராடு வதற்கும் யாரோ சிலரோடு போராடுவதற்கும் மட்டுமே ஒன்று சேர பழகி இருக்கிறோம், வேற்றுமையில் ஒற்றுமை, ஒற்றுமை எனும் கயிற்றைப் பற்றி பிடியுங்கள், ஒன்று பட்டால் உண்டு வாழ்வு எனும் நல்மொழிகளெல்லாம் இன்று பழ(மை) மொழிகளாகிக் கொண்டிருக்கின்றன.

சிறு குழந்தை, ஒன்று இரண்டு என்று எண்களைகற்றுக்கொள்ளத்தொடங்கும்போதே அங்கே நம்பர் ஒண்ணுக்கான போட்டியும் ஆரம்பமாகி, வேலை அலுவலகம் என்று அது விடாது தொடர்கிறது. பலநேரம், எல்லோரையும் தவிர்த்து விட்டு, எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு, நான்... நான் மட்டுமே, எனது.. எனக்கு மட்டுமே என்று முண்டியடித்து முன்னேறுபவன் வெற்றி பெற்றவனாக முன் நிறுத்தப்பட, மற்றவர்கள் பின் தங்கிப் போனவர்களாக சித்தரிக்கப் படுகிறார்கள், படிப்பில் மட்டுமல்ல சமுகத்திலும்.

சேர்ந்து உண்டு, சேர்ந்து பேசி, சேர்ந்து வேலை செய்து, சேர்ந்து கற்று, சேர்ந்து மகிழ்ந்த காலங்கள் எல்லாம் இந்த நம்பர் ஒன் வேட்டையில் நசுங்கிக் கொண்டிருக்கிறது. சுய மரியாதை, சுய கௌரவம், சுய பச்சதாபம், சுய பிரதானம் என ஒவ்வொரு




Dr. ஃபஜிலா ஆசாத் d.lit
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

சுயமும் அன்புமயமான இந்த உலகத்தை ஒவ்வொரு தனித் தீவுகளாக கூறு போட்டு பிரித்துக் கொண்டிருக்கிறது.

வெற்றி என்பது மகிழ்ச்சி என்றும், ஒருவனின் தோல்வி மற்றவனின் வெற்றி என்பதும் விளையாட்டின் விதிகளாக இருக்கலாம். வாழ்வின் விதி வேறு. அது உனக்கும் எனக்குமாக சேர்ந்து பகிர்ந்து உண்பதையே மகிழ்ச்சி என்கின்றது. விற்பவனின் இலாபம் வாங்குபவனின் ஆதாயம் எனும் win-win கொள்கையே வாழ்வின் உன்னதம், மகிழ்ச்சியின் மூலதனம்.

தென்னாப்ரிக்காவில் கூட்டாக சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்த பழங்குடி சிறுவர்களைக் காணும் மேலைநாட்டு பயணி ஒருவருக்கு அவர்களை வைத்து வேறு ஒரு விளையாட்டு விளையாடத் தோன்றுகிறது. பழங்களையும் சாக்லேட் களையும் பிஸ்கட்களையும், ஒரு கூடையில் அடுக்கி தூரத்தில் வைத்து விட்டு, அந்த சிறுவர்களை வரிசையாக நேர் கோட்டில் நிற்க செய்து உங்களில் யார் வேகமாக முந்தி சென்று அந்த கூடையயை நெருங்கி நம்பர் ஒண்ணாக வருகிறார்களோ அவர்களுக்கு அந்த கூடையும் அதில் உள்ள பொருட்களும் பரிசாக அளிக்கப் படும் என்கிறார்.

ரெடி..., ஸ்டெடி..., கோ..! என்றவுடன் அது வரை சேர்ந்து விளையாடிய அந்த சிறுவர்கள் ஒன்றை ஒன்று முட்டி மோதி வெற்றி தளத்தை அடைய முயலும் என நினைத்தவருக்கு பெரும் ஏமாற்றம். அந்த சிறுவர்கள் அத்தனை பேரும் ஒருவர் கையை மற்றொருவர் பிடித்துக் கொண்டு சேர்ந்து சென்று, கூடையை நெருங்கி பொருட்களை எடுத்து ஒருவருக்கொருவர் பகிர்ந்து மகிழ்கிறார்கள்.

எதிர்பாராத இந்த திருப்பத்தைக் கண்டு திகைத்த அந்த பயணி ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டபோது அந்த சிறுவர்கள் கூட்டாக சொல்கிறார்கள், வாழ்வில் நம்முடன் ஒன்றாக பயணிப்பவர்கள் தோற்று நம் முன் நிற்க தனி ஒருவன் மட்டும் தன் வெற்றியை எப்படிக் கொண்டாட முடியும், தன்னை சுற்றி இருப்பவர்களை கவலையோடு தலை குனிய விட்டு விட்டு தான் மட்டும் எப்படி தலை நிமிர முடியும்.. நான் நானாக இருப்பதற்கு நான் மட்டும் காரணம் அல்ல. ஒருவன் இல்லாமல் மற்றவன் இல்லை. வெற்றி எல்லோருக்கும் பொதுவானது என்கிறார்கள்.

இந்தஇனிமையானமனிதநேயபாடத்தை எங்கே கற்றார்கள் அந்த சிறுவர்கள். உண்மை என்னவென்றால் அந்த பண்புதான் மனிதனின் பிறப்பியல்பு. இயல்பை மீறிய சிந்தனைகளை தான் ஏதோ ஒரு தேடலின் போது இயல்பாக நம்மை தொற்றிக் கொள்ள விடுகிறோம். பெரும்பாலும் நாம் தனித்து நிற்க முயற்சி செய்யும், நம் வாழ்க்கை பயணத்தில் நம்மையுமறியாமல் நம் இனிய தனித்தன்மையை இழந்து கொண்டிருக்கிறோம். இருந்தும் மனிதம் நமக்குள் சுரந்து கொண்டிருக்கிறது.

மனிதமே மகிழ்ச்சி எனும் அந்த மந்திரத்திற்கு நம் மனதை தீர்க்கமாக உட்டுபடுத்தவில்லையென்றால், அது பல தந்திரங்களை செய்து நம்மை எந்திரமாக்கி விடும். போட்டிக்கு ஆள் இல்லையென்றால் நான் எப்படி வெற்றி மகுடம் சூட்டிக் கொள்வது என்று எதிரிகளை அது உருவாக்கி விடும். உன் நண்பன் யாரென்று சொல் நீ யாரென்று சொல்கிறேன் என்று கேட்டது போய் என் எதிரி யார் தெரியுமா என்று பறை சாற்றிக் கொள்வதில் கர்வம் கொள்ள செய்யும் மனம், நம்முடைய ஒவ்வொரு வெற்றிக்கும் நம்மோடு இணையும் கைகளை விட, நம்மை உசுப்பேற்றி உறுவேறச் செய்யும் எதிரிகளை இனங் காணத் தொடங்கி விடும் என அச்சுறுத்துகிறது வாழ்வியல்.

மேலை நாட்டின் இன்றைய ஆய்வுகள் ஸ்ட்ரெஸ்ஸை நல்லது என்கிறது. ஏன் தெரியுமா?! ஸ்ட்ரெஸ் வரும் போது ஆக்ஸிடோசின்என்றசோஷியல்ஹார்மோன் சுரக்கும். இது மற்றவர்களுடன் இயைந்து

பழகத் தூண்டும். அப்படி சோசியலைஸ் பண்ணும் போது ஸ்ட்ரெஸ் குறையும் ஒற்றுமை கூடும் என்கிறார்கள். இயற்கை இப்படி இருக்க அதை விட்டும் ஸ்ட்ரெஸ் வரும் போது தன்னம்பிக்கையும் சமுக நம்பிக்கையும் இழந்து தனிமைப் படும்போது ஆக்சிடோசின் செயல் இழந்து மனஅழுத்தம் அதிகமாகி அதனாலேயே பலருக்கும் மகிழ்ச்சி குறைகிறது என்கிறது மனஇயல்.

மனிதர்களை ஹியுமன் ரேஸ் (human race) என்று அழைப்பது ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டு யார் வெற்றி பெறுகிறார்கள் என்று பார்ப்பதற்கல்ல, ஒருவரை ஒருவர் பகையாளியாக பார்க்காமல் நட்போடு கை கோர்த்த எங்கள் உழைப்பே எங்கள் வெற்றியின் மூலகாரணம், இது ஒரு தனி மனித வெற்றி அல்ல எங்கள் அனைவரின் வெற்றி, இணைந்து செயல்படுங்கள் உங்கள் கனவுகள் நனவாகும் என்கிறார் ஐரோப்பிய சாதனையாளர் ரிச்சர்ட் பிரான்ஸன்.

வாழ்வின் அன்றாட செயல்களில் இயைந்து இருக்க வேண்டிய மனித நேய உணர்வு பல நேரம் போட்டி மனப் பான்மையால் நீர்த்துப் போய் பேரிடர் காலங்களில் மட்டும் சட்டென்று வெளிப்படும் இன்ஸ்டன்ட் இரக்கமாக சுருங்கிப் போயிருக்கிறது. நீறு பூத்த நெருப்பாக அமிழ்ந்திருக்கும் மனிதத்தை புரிந்து சற்றே அதை நிரடி விட்டால் போதும் ஒரு சொம்புக்குள் சுருக்கி வைத்திருக்கும் மனிதம் பொங்கிப் பிரவாகமெடுக்கும் கங்கை வெள்ளமாய் இந்த உலகை நனைத்து விடும்.

ஒருவரின் திறமை என்பது அவருக்கானது மட்டுமல்ல. life is balancing. உன்னிடம் இருப்பதை நீ கொண்டு வா என்னிடம் இருப்பதை நான் தருகிறேன் என்று ஒருவருக்கொருவர் இணக்கமாக பகிர்ந்து கொள்ளும்போது எல்லோருடைய தேவையும் இனிதே நிறைவேறுகிறது. மகிழ்ச்சியும் அங்கு பலமடங்காகிறது. எது வேண்டும் நமக்கு..?!



# ஜல்லிக்கட்டு தமிழன் உரிமை

வீரம் சிறந்த நாட்டில்
வேடிக்கை பார்க்கிறோம்
நம்மை முடக்கி ஆளும்
அரசு சட்டத்தினால்


சுதந்திர பூமியில் தான்
நிறைந்து இருக்கிறது
கொத்தடிமை தனமும்
கோமாளித்தனமும்

சீறிவரும் சிங்கமே ஆனாலும்
எதிர்த்து நிற்க்கும் தமிழன்
என்பதை மறக்கடித்த
காலம் இதுதான்

ஜல்லிக்கட்டு தமிழன் உரிமை
என பிறர் சொல்ல கேட்டு
தலையாட்டும் தமிழனாய்
வாழ்வதை விட செத்து மடியலாம்

தமிழன் தான் இறந்தான்
என்ற பெயராவது
சேர்ந்து இருக்கும்

**பாண்டிய ராஜ்**
**கவிஞர் மீன் கொடி**



# இயற்கை!

மேகத்தின் திரள்கள் இணைவால்
வான் மழை பூமியினை உயிர்ப்பிக்கிறது
ஓடைகளும் ஆறுகளும் அழகாய்
தவழ்தலில் நடைப்போட்டு ஓடுகிறது. ...
பச்சை வண்ண ஆடை உடுத்தியிருக்கிறது...
காடுகளும்..கழனிகளும் வனப்பாய் மிளிர்கிறது
ஒற்றைக் காலில் நிற்கின்ற மரங்களும்...
உயிர்கள் வாழ சுவாசக் காற்றையும்
ஓராட்டுதலையும் ஒருக்க புளகிதம்
அடைய வைப்பதோடு ஓராயிரம் கனிகளையும்
பல்லாயிரம் விருட்சங்களையும்
ஓய்வுக்கான நிழலையும்
தன்னகத்தே வைத்திருந்தும்
தலை கவிழ்ந்து நிற்கிறது செருக்கில்லாத
சுய நலமற்ற இயற்கை!

**- பஞ்ச்தர்மா**
வெள்ளாளப்பட்டி

# மார்கழிப்பூவே

பெண்களெலாம் திருப்பாவைத் திருவெம் பாவைப்
பேரணியாய் சேர்ந்துவொன்றாய்ப் பாடி வீதி
மண்போற்றும் மாதவனின் பெருமை பாடி
மலர்வாயன் திருமாலை மகிழ்ந்து பாடிக்
கண்பாவும் கருணையெலாம் உலகம் உய்யக்
காதலிசைப் பாடிவரும் இராதை போலே
பண்பாடிக் காண்டெடாட்டம் போட்டு ஆங்குப்
பணிந்திடுவார் திருமாலை வாழ்த்தி நன்றாய்

வாரணமே அணியாகத் திருவ ரங்க
வாயிலையும் கோபுரத்தை வணங்கி நிற்கும்
தோரணமும் வீடுதோறும் மாவின் பச்சைத்
தூயவொரு பசுவழங்கும் மணத்தின் நெய்யும்
ஆரணமே சொலையெலாம் ஆவும் மேயும்
ஆதிமூலம் பேர்சொல்லி அழைக்கும் யானை
ஓரணியாய்ப் பனிநாளில் போற்றி வாழ்த்தும்
ஒப்பில்லாத் திருமாலின் நாமம் வாழ்க

**வை. இராமதாசு காந்தி**
புதுச்சேரி

# கருப்பசாமியும் நானும்

## மகிழ்ச்சி ஆ.ராம்குமார்

யப்போ... என்னடா கத்துர சொல்லு. ஆடு குட்டி போட்டுருக்குப்பா வா. சரி, போ வர.சீக்கிரம் வாப்போ.. ம்.. கெடா குட்டி போட்டுருக்கு.சரி சும்மா வாடா பேசிகிட்டே.

அப்பா நா அத எப்படி கூப்புடனும்.அத வா போ. இந்தேரினு கத்துனா போதுடா. நீ லூசுப்பா, உன்ன யாராவது வா போ இந்தேரினு கூப்டா திரும்பி பேசுவியா?...

டேய் அது ஆடுடா அதுக்கு என்ன தெரியும்.நீ தான சொன்ன ஒருத்தருக்கு எதாவது தெரிலனா அத நமக்கு சாதகமா வச்சி யாமாத்தக் கூடாதுனு. அத, நா ஆட்டுக்கு பேர் வக்கப் போர ...ம் ...

எதோ பன்னு.என்ன பேர்டா..இருப்பா யோசிக்கனும்ல. பெரிய விஞ்ஞானி இவுரு. யப்போ அதவுட பெரிய வேலப்பா இது. ம்... சொல்லுடா பெரிய மனுசா. யப்போ, கருப்பு சாமி எப்படி இருக்கு பேரு.அது நம்ம குடியசாமிபேருடா.

இருக்கட்டுப்பா. பெருசானா சாமிக்கி வெட்டிப்புடுவ அதா இந்த பேரு வச்ச. இப்ப இத குடியசாமிக்கு வெட்டுனா சாமியவே வெட்ர மாதிரி தான. சரி போ... கருப்புசாமிய பாத்துக்ரது தா என் வேல.. டேய், பள்ளிக் கூடம் அங்க எவ போவாப்பா இப்ப அஞ்சாவுதுக்கு எதோ பெரிய பரீட்சையா அதா இனி நா போகல... டேய் போய் படிடா..

பள்ளிக்கூடத்துக்கு போடா... சில நாள் பள்ளிக்கூடமும் கருப்புசாமியுமாக வாழ்க்கையகழிச்சா...என்னயோசிச்சானோ தெரயல... யப்போ கருப்புசாமிய சாமிக்கு வேன்டிவுடாதப்பா அவ நம்பக்கூடவே



இருக்கட்டும்.. சரிடா.. கொஞ்ச நாள் கருப்புசாமி வளந்துட்டா. எப்படி இவ வளந்த.. யப்பா கருப்புசாமி வளந்துட்டா நா மட்டும் ஏ வளர்ல. டேய் அது ஆடுடா. யப்போய் ஆடு சொல்லாதப்பா சரி, கருப்புசாமிலா ஒரு வருசத்துல பெரியாள வளந்துடுவான்டா. அவங்க சனம்லா அப்படிதா.. ம்.. நா எப்ப வளர்வ.. வுடுப்பா வளந்தவல்லா என்ன செஞ்சு கிழிச்சா... போடா போய் சாப்ட்டு.. கருப்புசாமிக்கு புள்ளப் போடுனு சொல்லிட்டு அப்பா காட்டுக்கு போய்ட்டாரு.



# விவசாயின் புலம்பல்

வானம் பொழிய வில்லை
வயல் செழிக்க வில்லை
வறுமை விலக வில்லை
வளமை கிடைக்க வில்லை

கவலைத் தீர வில்லை
காட்சி மாற வில்லை
கண்ணீர் குறைய வில்லை
காலம் கனிய வில்லை

ஏழ்மை ஒழிய வில்லை
ஏக்கம் குறைய வில்லை
ஏற்றம் கிடைக்க வில்லை
எதுவும் புரிய வில்லை

இன்பம் கூட வில்லை
பொழுது விடிய வில்லை
இதயம் துடிக்க வில்லை
இதற்குத் தீர்வி ல்லை

கடவுள் இங்கி ல்லை
கருணை எங்குமி ல்லை
கடுஞ் சொல்பேச வில்லை
கனியும் கிட்ட வில்லை

எதுவும் எனக் கில்லை
ஏனென்றுப் புரிய வில்லை
என்விதி மாற வில்லை
எதற்கென்றுத் தெரிய வில்லை

மண்டியிடத் தெரிய வில்லை
மயக்கம் தெளிய வில்லை
மனதில் மகிழ்வி ல்லை
மரணமும் வர வில்லை.

**-நா.பாண்டியராஜா.**
ஆர்.எஸ்.மங்கலம்.

ரெண்டு நாள்ல உடம்பு சரியில்லாம ஆயிடிச்சு.எனக்கு பேச்சு இல்ல.. கண்ணத்தொரக்க முடியல..எங்கம்மாவும் அப்பாவும் ஆஸ்பத்திக்கும் கோயிலுக்கும் அளஞ்சு ஒய்ஞ்சு..குடியசாமி கோவிலுக்கு போய் கிடா வெட்டிரனு வேண்டிக்கிட்டு வந்தாங்க.கடைசி ஆஸ்பத்திரிக்கு அலைஞ்சு ஒய்ஞ்சு போய்டாங்க...

ஒரு வேலயா சரியாச்சு...கொஞ்சு நாள் கழிச்சு எனக்கு காது குத்த எங்க மாமா, பங்காளிங்க நாங்க எல்லாரும் போனோ.... கூட கருப்புசாமியவும் கூபுட்டு போன. எனக்கு அப்ப தெரியாது. அது நடக்கும்னு. அந்த கொடும நடக்கும்னு... எனக்கு மாலைப் போட்ட மாதிரி அவனுக்கும் போட்டாங்க.. நானும் அவனும் சந்தோசத்துல இருந்தோ ..

எனக்கு காது குத்துனாங்க..அவனுக்கு பொங்க சோறு வச்சி பொட்டு வச்சாங்க.. அப்ப தெரியாது அது தா எனக்கும் அவனுக்குமான கடைசி சந்திப்புனு... அவ போவ மறுத்தும்..வழுக்கட்டாயமா இழுத்திப்போனாங்க.. என்ன எங்கப்பா இழுத்து புடிச்சுகிட்டாரு.

நான் கத்த கத்த கருப்புசாமி கதற கதற அவன வெட்டி துண்டாக்கிட்டாங்க.. கொஞ்ச நேரத்துல கொழம்பாச்சு... கறியும் சோறுமா வயித்துக்குள்ள போச்சு... எங்க குடியசாமி பாத்துக்கிட்டுதா இருந்துது...

கருப்புசாமி சாவுரத கருப்புசாமி பாத்துச்சு கடைசி வர ஒன்னு பன்ன முடியல.இந்த மனுசனுவ செயல... நானும் எங்க குடியசாமியும் கறிச்சோத்துக்கு பின்பு தனிமைப்படுத்தப்பட்டோம்... ■

---

அமைதியை
தேடாதே...
நீயே அமைதியாய்
மாறி விடு...!!!

**ச. இராஜ்குமார்**

# புல்லும் பெண்ணும் ஒரு ஜாதி



புல்லொன்றாயெண்ணிய
புறக்கணித்தலினூடும்
மிதிபட்டு மிதிபட்டு
வேரறுந்தாலும் மீண்டும்
தளைப்பேன் நான்.

குடும்ப வன்முறைகளெனும்
குப்பைவாரிகளால்
கிளறிக் கிளறி
பிடுங்கிப்போட்டாலும்

சமூக ஒடுக்குதல்கள்
மண்வெட்டிகளாய்
வேரைச்செதுக்கிச் செதுக்கி
வீழ்த்திய வீறாப்பில்
வீறுகொண்டெழுந்தாலும்
வன்முறையாளர்களின்
மனப்பூமி கீறி
மீண்டும் மீண்டும் தளைக்கும்
புல்லாயான பெண்நான்.

எனையழித்தலென்பது உமக்கு
முடியாததொன்றாய்
படைத்தவன் வகுத்த
நியதியானபின்
எவனாலும் பிடுங்கமுடியாது
இந்தப்புல்லை....
பூலோகமெங்கும்
பரந்துகிடக்கிறேன்
மண்பருமன் விதைகளால்.

மண்ணையகழ்ந்து
எங்கெல்லாம் பரவினும்
அங்கெல்லாம் சிரிப்பேன்
அற்புதச் சிறு புல்லென
நீங்கள் கண்டுகொள்ளாதபடி.

உலகை உயிர்ப்பாக்கும்
பெண்பிறவியாகி
உலகம் தழைத்தலில்
உயிர்மூச்சு நான்.

அழகுபடுத்தலொன்றே
எங்கள் பணியென்றா
நினைத்திருக்கிறீர்கள்...?

**சம்மாந்துறை மஷூறா.**
இலங்கை.

# மயானம்

நிரந்தர உறக்கமளிக்கும்
மண் மெத்தை!

வேறுபட்டப் பெயரைக்
கொண்டவர்களை
ஒற்றைப் பெயரிட்டு அனுமதிக்கும்
சுடுகாடு!

இங்கு மட்டும்தான்
மெய் பேசியவனின் ஆட்சி!
வாயடைத்துப் படுத்திருக்கும்
பொய்யர்கள்!

காட்டில்
அடுப்பு எரியும்போது
ஒரு வீட்டில்
அடுப்பு அணைக்கப்படுகிறது!

பல தாய்மார்களின்
வயிற்றில் பிறந்தவர்கள்
இறுதியில் புதை
ஒற்றை வயிற்றில்!

மனிதன்
நிரந்தர உறக்கம் கொள்கிறான்
சேர்த்து வைக்காத சொத்தில்!

வெறுங்காலில் நடந்தவனுக்கும்
பூ வைக்க மறுக்கப்பட்டவளுக்கும்
மலர்பாதையில் ஊர்வலம்!

ஆட்டமிட்டவர்கள்
அடங்கிப் போனதால்
எப்போதும் இங்கு
மயான அமைதி!

வாழ்க்கைத் தொடரின்
இறுதி முற்றுப்புள்ளியே!
உன்னிலிருந்தே தொடங்குகிறது
வாழ்க்கைத் தத்துவம்!

**சா.கா.பாரதி ராஜா**
செங்கல்பட்டு

தொழிலில் நிறைய நஷ்டம்
நெய் விளக்கு
ஏற்றி வைக்குமாறு
அம்மா சொல்ல..
கோவிலுக்குச் சென்றேன்
அகல் விளக்கு விற்கும்
கந்தலாடைப் பெண்மணி
வாங்கிக் கொள்ளுமாறு
கை நீட்ட..
அழகாக இருந்தது
குபேர பொம்மை.

**- பாணால். சாயிராம்.**

💣

அத்தனை
சிறுவர்களும்
அலைப்பேசியில்
விளையாடுவதை
வேடிக்கைப் பார்த்தபடி
தனிமையில்
அமர்ந்திருந்தது
அந்த பூங்கா...

💣

மலரின் பேரழகை மூடியாகி
பத்திரப்படுத்தியது
இரவின் இருள்....

**- மகா**



# சேலையில தூளிக்கட்டி

ஆணழகன் என்னாட்டம்
ஆம்பள புள்ள ஒண்ணு
பெத்து தர வக்கில்ல
இவ கூரு கெட்ட மூதேவி
குடும்பத்துக்கு லாயிக்கில்ல!

**பெ. விஜயலட்சுமி,**
காஞ்சிபுரம்.

நாள் முழுக்க உடலுழைச்சி
சம்பாதிச்ச பணமெல்லாம்
டாஸ்மார்க்குக்கு போயாச்சி
மொத்தத்துல என் குடும்பம்
நடுத்தெருவுல நின்னாச்சி!

பெத்ததுகளை கரைசேர்க்க
நான்பட்ட பாட்டைத்தான்
கேட்கத்தான் யாருமில்ல!

ஏழைத்தாயின் வறுமையைப்
போக்க இங்கு யாருக்கும்
நேரமில்ல!

நடுரோட்டில் குடிச்சுப்புட்டு
விழுந்து கிடக்கும் அவனுக்கு
என்ன விட்டா நாதியில்ல!

அரிசி இல்ல பருப்புமில்ல
வீட்டுலதான் எதுவுமில்ல
கவலயில்ல அவருக்கு
பசியோட கெடக்குதிங்க
நான் பெத்த புள்ளைங்க எல்லாம்!

கால் வயித்து கஞ்சிக்கு
வேலைக்குத்தான் நான் போக
எத்தனிக்கும் வேளையில
பச்ச உடம்புக்காரி
போகாதடி வேலைக்கு
ஊராரும் சொல்லுராங்க!

சேலையில தூளிக்கட்டி
கைக்குழந்தைய தூங்க வச்சி
கதிரருக்க அருவாள
தீட்டிக்கிட்டு நான் போனேன்!

உச்சி வெயில் பொழுதுல
குனிஞ்சி நான் அறுக்கையில
அடிவயிறு இழுக்குது இப்ப

ஆறுகிட்ட சொல்லிருவ
என் நிலைய மெல்ல!

# மொட்டக் கடிதாசி



## - நௌஷாத் கான் லி

மூணுவருச காதல் ...தினம் தினம் அவ நினைப்பு தான் பாடாய் படுத்தித்து இருந்தும் அந்த பாழாய் போன மனசுக்குள்ளே இருக்குற காதலை அந்த இதயம் படத்துல வர்ற முரளி போல சொல்ல முடியலை. கண்ணாபின்னானுன்னு கவிதை எழுதுறேன் ,கதை எழுதுறேன் ,அவளை நினைச்சு பாட்டு பாடுறேன் இருந்தும் என்ன பயன் ??? சொன்னா தானே மனசுக்குள்ளே இருக்குற என் காதல் அவளுக்கு தெரியும் ..சனியன் பிடிச்சவனே இப்படி எங்ககிட்ட புலம்பி தள்ளுறதை விட்டிட்டு அவகிட்ட சொல்லி இருந்தா காலாகாலத்துல கல்யாணம் நடந்து புள்ள குட்டி பொறந்து குடியும் குடித்தனமா நல்லா இருப்ப ,எங்ககிட்ட புலம்புறது சுத்த வேஸ்ட்டுன்னு ஜூனியர் கூட காரி துப்பிட்டு போய்ட்டானுங்க.. அவளை தவிர அந்த காலேஜ் முழுதும் என் மனசுல உள்ள காதலை சொல்லிட்டேன்

சொன்னாதானேகாதல்கூடஜெயிக்கும் ..என்னன்னு தெரியலை ஊர் முழுக்க வாய் கிழிய பேசுறேன் அவளை பார்க்கும் போது மட்டும் வாய் குளிர் ஜூரம் வந்தா மாதிரி நடுங்குது ..என் காதல் சிலருக்கு காமெடியா தெரியலாம் ஆனா என் வாழ்வின் அர்த்தம் அவள் ..என் தாய்க்கு பிறகு என் வாழ்வில் அவள் அங்கமாக போகிறவள் என்று அவளை பார்த்த முதல் மாத்திரத்திலேயே மனதில் கங்கணம் கட்டி கொண்டு இருக்கிறேன் ...நிச்சயமா அவ என் வாழ்க்கைல வந்தா என் வாழ்க்கை மட்டுமல்ல அவ வாழ்க்கையையும் சந்தோசமா பார்த்துப்பேன் ..மூச்சு முட்டுமளவு தேக்கி வைத்திருக்கும் மூன்று வருட காதலை எல்லாம் கடிதத்தில் கவிதையாக்கி கொட்டி என் உயிரை உயிர் எழுத்தாக்கி காதலை பறை சாற்றும் விதமாக கடிதத்தை வடித்திருந்தேன் ..அது வெறும் கடிதமல்ல என் வாழ்க்கை ...என் வருங்கால வாழ்க்கை இருண்ட காலமாக ஆகாமல் இருக்க நான் எழுதிய அந்த கடிதத்தை வகுப்பில் எல்லோரும் உணவு உண்ண போகும் நேரம் பார்த்து யாருமில்லாத போது நான் எழுதிய கடிதத்தை அவள் பேக்கில் வைத்து விட்டு வந்து விட்டேன் ..

மறுநாள் மாலை ராஜாவாகிய நான் கையில் ரோஜாவுடன் கொஞ்ச போகும் என் காதலோடும் கொஞ்சம் பயத்தோடும் அந்த பார்க்கில் காத்திருந்தேன்.. எப்படி யாவது அவள் முகத்தை பார்த்து இந்த ரோஜாவை கொடுத்து என் காதலை சொல்லி விட வேண்டும் என்று என் இலக்கியாவுக்காக இலட்சியத்துடன் நின்றிருந்தேன் ..

அவள் அந்த பார்க்கை நோக்கி வந்து

கொண்டிருந்தாள் ,அவள் உதட்டில் புன்னகை வழிந்தோடியதை என்னால் உணர முடிந்தது.. நிச்சயம் என் காதல் கடிதம் அவள் மனசு என்னும் கோட்டையின் பூட்டை திறந்திருக்கும் என்று நம்பினேன் ..

நான் அவளை நெருங்கும் முன் எனக்கு முன்னதாக நின்று கொண்டிருந்த எங்கள் கிளாஸ் மேட் அரவிந்தனை ஓடி சென்று கட்டியணைத்தாள்... என்னடி இத்தனை நாளா காதலை சொல்லியும் சம்மதிக்காதவ திடீர்ன்னு வர சொல்லி கட்டி பிடிச்சு காதலை சொல்லி சர்ப்ரைஸ் கொடுக்கிற ?

நடிக்காதடா,இன்னைக்குஎன்பிறந்தநாள், என் பிறந்தநாளுக்கு என்னை அசத்தணும்னு நீ மனசுக்குள்ள பூட்டி வச்சிருந்த காதலை எல்லாம் கவிதையாக்கி அசத்தி இருந்தியே அதுல விழுந்துட்டேண்டா.. பேரு எழுதாம மொட்டக் கடிதாசி எழுதி என் பேக்குல போட்டா எனக்கு தெரியாதுன்னு உனக்கு நினைப்பா ???

உன் எழுத்து மூலமா உன் காதலை புரிஞ்சுக்கிட்டேன் டா என்று அவன் கை யோடு அவள் கை இணைத்தாள்..அந்த மலமாடு அரவிந்தனும் அவள் காதலுக்காக அவன் எழுதாத கடிதத்தை அவன் எழுதியதாக ஒத்துக்கொண்டான் ..

அப்பொழுது காற்று பலமாக வீசியது அவள் கைகளில் இருந்த அந்த காதல் கடிதம் பறந்து வந்து என் மேல் ஒட்டி கொண்டது அப்பொழுது அரவிந்தனின் கையை கொஞ்சம் உதறி விட்டு வேகமாக ஓடிவந்து என் மேல் ஒட்டி இருந்த காதல் கடித்தை அவள் கைகளில் எடுத்து ,அந்த கடிதத்தை முத்தமிட்ட பின்னர் அவள் நெஞ்சோடு ஒட்டி கொண்டாள்...கண்களில் ஆனந்த கண்ணீரோடு மனதில் அவள் காதலின் நினைவுகளோடு அந்த பார்க்கை விட்டு திரும்பினேன்.. பார்க் வாசலில் சிலையாய் இருந்த காந்தி என்னை பார்த்து புன்னகைத்தார் !!

# தோல்விக்கு தோல்வி தந்து வெல்லடா

நீயும் நானும் ஒண்ணு தானே
நெஞ்சில் நிறுத்தடா -- ஒருத்
தாயும் பிள்ளை போல நாமே
தெரிந்து கொள்ளடா!

சாதி மதமென சண்டை போட்டு
சாவ தெதுக்கடா? - நாம
மோதி சாக மதவெறி ஊட்டி
விட்ட தாரடா?

ஆரி யத்தின் அடிமை யாக
ஆன தெதுக்கடா? - தமிழ்
வேரினை வெட்டு கின்ற வீணனை
வெட்டி வீழ்த்தடா!

உனக்கும் எனக்கும் குறுக்கே எதுக்கு
சாதி மதமடா - வாழ்க்கை
கணக்கில் கசடாய் மடமை இருக்கு
கணக்கை தீறடா!

இதுவரை செய்த தப்பை உணர்ந்து
திருத்திக் கொள்ளடா - நீ
அதுவரை மாந்த னில்லை என்பதை
அறிந்து கொள்ளடா!

வாழப் பிறந்தோம் வாழு கின்றோம்
என்று சொல்லடா - உன்னைத்
தாழ வைக்கும் தீதை எல்லாம்
தடுத்து வெல்லடா!

குனிந்து பணிந்து கும்பிடு போடும்
குற்றம் தள்ளடா - நீ
துணிந்து நிமிர்ந்து தோல்விக்கு தோல்வி
தந்து நில்லடா!

இருக்கும் வரையில் இமையைப் போல
இருந்து வாழடா - நீ
நெருப்பு போல கசடு அழித்து
நிமிர்ந்து வாழடா!

**புதுவைத் தமிழ்நெஞ்சன்**

## புத்தக விமர்சனம் : கவிஞர் இராம வேல்முருகன்




பிரான்சு நாட்டில் வாழும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் அனுப்பிய புத்தக கட்டொன்று கிடைக்கப்பெற்று பிரித்தால் மிக அருமையான வடிவமைப்பில் ஒரு புத்தகம். சுவிஸ் நாட்டில் வசிக்கும் சகோதரி பைந்தமிழ்ச்செம்மல் நிர்மலா சிவராசலிங்கம் அவர்களது புத்தகம். மரபுக்கவிதை யாப்பதில் சிறந்து விளங்கும் சகோதரி அவர்களின் ஹைக்கூ கவிதைப் புத்தகம். அதுவும் இருமொழிக் கவிதைத் தொகுப்பு. ஆம் நூறு ஹைக்கூக்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் இருமொழிகளிலும் நிரம்பிய புத்தகம்.

வடிவமைப்பே கவிதைகளைப் படிக்கத் தூண்டுகிறது.

ஓடைநிலா என்பது அந்நூலின் பெயர். அட்டையில் உள்ள நிலா நம்மை உள்ளே அழைக்கிறது வாசிக்க. நண்பர்கள் கா.ந. கல்யாணசுந்தரம், அனுராஜ் அவர்களின் அணிந்துரை வாழ்த்துரையோடு தொடங்குகிறது புத்தகம். ஆங்கிலத்தில் இவற்றை மொழிமாற்றம்செய்ததிருபுகழேந்தி நண்பர் இளைய பாரதி கந்தகப்பூக்கள் உள்ளிட்டோரின் வாழ்த்துரையும் உண்டு.

ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டிரண்டு கவிதைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அழகிய படங்கள் பின்னணியில் வடிவமைக்கப் பட்டுள்ளன. வண்ணப்பிரதியாக அச்சிட வடிவமைக்கப்பட்டுள்ளது.

கவிதைகள் அனைத்து தடங்களிலும் பயணிக்கின்றன. இயற்கை காட்சிகள் சமூக அவலங்கள் போன்று அனைத்தையும் தொட்டுச் செல்கின்றன. பெரும்பாலும் இயற்கை சார்ந்த கவிதைகளே அதிகம்.

ஹைக்கூ என்பது ஜப்பானிய கவிதை வடிவம். இது 5/7/5 என்ற அசைக்கட்டுப்பாடுகள் உடையது. முதல் இரண்டு வரிகள் ஒரு செய்தியையோ காட்சியையோ சொல்ல மூன்றாவது வரி அதற்கு மாறுபட்ட எதிர்பாராத செய்தியைச் சொல்லும். முதலிரண்டு வரிகள் ஒரு செய்தி கூறும். இரண்டும் மூன்றும் வேறு ஒரு செய்தி கூறும். இதில் இரண்டாவது வரி மிக நேர்த்தியாக வடிவமைக்கப் பட்டிருக்க வேண்டும். இதுவே ஹைக்கூவின் உத்தி.

ஆனால் அசைக்கட்டுப்பாடு தற்போது தமிழ்க்கவிஞர்களால் பின்பற்றப்படுவதில்லை என்பதை ஹைக்கூ கவிஆளுமைகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். மூன்றுவரிக் கவிதையே ஹைக்கூ என ஆகிப் போனது.

கவிஞர் நிர்மலா சிவராசசிங்கம் அவர்களின் நூலிலும் இந்த அசைக் கட்டுப்பாடு இல்லை. ஆனால் ஹைக்கூ வுக்கான உத்தி கடைப்பிடிக்கப் பட்டுள்ளது. பெரும்பாலான கவிதைகள் இயற்கைக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. சூரியன் அலைகள் கடல் காடு மரம் என்றே கவிதைகள் சுற்றி சுற்றி வருகின்றன. ஒன்றிரண்டு சமூகக் கருத்துகளும் சிறப்பாக கையாளப்பட்டுள்ளன. விவசாயி உழைப்பாளி மணற்கொள்ளை போன்றவையும் கவிதைகளில் பிரதி பலிக்கின்றன.

படகு சவாரி
நன்றாக இருக்கிறது
வானில் முகில் கூட்டம் (9)

காய்கறிகளின் விலை
வீழ்ச்சி அடைகிறது
சந்தையில் கூட்டம் (26).

ஓட்டப்பந்தயம்
விறுவிறுப்பாக நடக்கிறது
கடை வியாபாரம் (27)

பட்டாசு சத்தம்
குறைந்துகொண்டே போகிறது
குழந்தையின் அழுகை ( 34)

வண்டிச்சக்கரம்
ஓடிக்கொண்டிருக்கிறது
வியாபாரியின் வாழ்க்கை (36)

விழாக்கால விடுமுறை
மகிழ்ச்சியைத் தருகிறது
மகனின் வருகை (49)

சிறுவர் உழைப்பு
குறைந்து போகிறது
பள்ளி வாழ்வு (56)

வயிற்றுப்பசி
குறைந்து செல்கிறது
குடத்தில் நீர் (67)

அடர்ந்த காட்டில்
நிறைந்து இருக்கின்றன
காலடித்தடங்கள் (88)

மரத்தடி நிழலில்
படுத்து உறங்கும்
வேர்கள் (89)

இவ்வாறு கவிதைகள் நம்மனதை அள்ளிச் செல்கின்றன. ஹைக்கூக்களுக்கு கற்பனை தேவையில்லை; இயற்கையான நிகழ்வுகளை அப்படியே சொல்வதுதான் ஹைக்கூ கவிதை; ஆனால் இயற்கை நிகழ்வு ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும். அட என்று படிப்பவரைச் சொல்ல வைக்க வேண்டும். இவற்றை கவிஞர் நிர்மலா அவர்களின் கவிதைகள் செவ்வனே செய்திருக்கின்றன. கற்பனை இல்லாத கவிதைகள். சில கவிதைகள் மிகச் சாதாரண செய்திகளையும் சொல்லிச் செல்கின்றன.

பாராட்டத்தகுந்த ஆங்கில மொழிபெயர்ப்புகள். நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் தமிழ் வரிகளுக்கு நேரடியாக ஆங்கில வரிகள் இல்லாது சற்றே இடம் மாறி இருந்தாலும் அருமையாகவே இருக்கின்றது. வாழ்த்துகள்!

ஆசிரியர் :
நிர்மலா சிவராசசிங்கம்
மின்னஞ்சல் :
sivamnirmala@gmail.com

பதிப்பாசிரியர் :
தமிழ் நெஞ்சம் அமின்

முகவரி :
Tamilnenjam
59, rue des Entrechats
95800 Cergy - France



# பூமியின் வேர்களில்...

பாதை முழுக்க போதை மரங்கள்
பச்சைப் பயிர்க்கெலாம் சாதி உரங்கள்
வீதி முழுக்க ஞான முரண்கள்
வேர்களி லேயே வேத நிறங்கள்

பூமி எப்போது புரண்டு படுக்கும் ?--அட
பூமியில் சாமி எங்குக் கிடைக்கும் ?

தூங்கிய தொடையிலே கயிறு திரிக்கும்
திரித்த கயிற்றால் அவனையே நெரிக்கும்
ஓங்கிய கைகளே உயர்ந்து கிடக்கும்
உண்மையின் கழுத்தைஉடைக்கத் துடிக்கும்
பூமி எப்போது புரண்டு படுக்கும்? -அதன்
புழுதிக் கெப்போது விடியல்கிடைக்கும் ?

உச்சியில் பூத்ததாய்த் தோள்களை ஆளும்
உண்டு கொழுத்தகை தாங்கிட நீளும்
துச்சமாய் வேர்களைக் கால்களே மிதிக்கும்
துணிவிலா வேர்களில் சூரியன் கொதிக்கும்

பூமி எப்போது புரண்டு படுக்கும் ?--அந்தப்
பூமியின்வேர்களில் வானம் கிளைக்கும்?

**கவிக்கோ துரைவசந்தராசன்**

# ஒற்றை சொல்

நேர்மை
நம்மை எடைபோடும்
துலாபாரம்...

சோதனையின்
பாதைகளில் நமைத் தள்ளி
சரித்திர சாதனையை
பரிசளிக்கும்
வர தேவதை!

சொல்லில்
செயலில்
வாழ்வில் என
எப்போதும் நாம்
அணிய வேண்டிய
கவசம்..!

இதுவொன்று
இருந்தாலே
வெற்றி யாவும்
நம் வசம்

அபூர்வங்களில்
ஒன்றாகிப்போன
ஒற்றை சொல்

வழக்கொழிந்த
அகராதிச் சொல்லாய்
மாறிவரும்...
இதுவும் நம் முப்பாட்டன்களின்
சொத்து என்பாதால்
பேணிக்காப்போம்

அருங்காட்சியகத்தில்
வைத்து அல்ல..
அரண்மனை போன்ற
நம் உள்ளத்தில் வைத்து!

**- திருமலை சோமு**
பெய்ஜிங்

நூறு நூல்கள் எழுதிய

## படைப்பின் சிகரம்

# முனைவர் மரியதெரசா...

இந்தியத் திருநாட்டில் உள்ள தமிழகத்தின் தலைநகரான சென்னையில் வசிக்கும் முனைவர் மரியதெரசா அவர்கள் ரங்கசாமி கல்வியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி இவை மூன்றிலும் பட்டம் பெற்று மும்மொழிப் புலமை கொண்டவர் இவர். தனது மும்மொழிப் புலமையை புத்தகங்களாக வெளியிட்டு தனது தனித்திறமையை பதிவு செய்துள்ளார்.

ஒவ்வொரு புத்தகமும் தமக்கு தலைப் பிரசவம் மாதிரி என்பார்கள் எழுத்தாளர்கள். புத்தகங்களைப் படைக்கும்பொழுது அவர்கள் தன்னையே மறந்து விடுவதாகவும், தன்னை அதற்கு அர்ப்பணித்து விடுவதாகவும் கூறுகின்றனர். இப்படிக் கூறிய பல எழுத்தாளர்கள் அதிகபட்சமாக இருபது புத்தகங்களைக் கூட முழுமையாக எழுதி வெளியிட்டார்களா என்பது சற்று சந்தேகமே.

ஆனால், இங்கு ஒரு பெண்மணி நூறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஒரே மேடையில் நாற்பது நூல்களை எழுதி வெளியிட்டு யூனிவர்சல் அச்சீவ்மென்ட் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்ஸில் இடம்பெற்றுள்ளார். அதுமட்டுமின்றி மேலும் ஐம்பது நூல்களை விரைவில் வெளியிடவுள்ளார். ஆறு நூல்கள் தமிழிலிருந்து இந்தி நூலாக மொழிபெயர்த்துள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட தொகுப்பு நூலில் எழுதியுள்ளார்.

பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி இளங்கலைப் பாடத்திட்டத்தில் இவரது ஹைக்கூ இடம்பெற்றுள்ளது. பணிரெண்டாம் வகுப்பு தமிழ் மேனிலை ஆசிரியர் பனுவலில்



இவரது கவிதை இடம் பெற்றுள்ளது (கேரள அரசு).

இவர் மரபு, புதுக்கவிதை, சிறுகதைகள், சிறுவர் இலக்கியம், ஹைக்கூ, லிமரைக்கூ, மோனைக்கூ, எதுகைக்கூ, ஆன்மீகம், மூன்றியோ, நாவல், மொழியாக்கம், சென்ரியு, முரண்கூ, போதனைக்கூ, பழமொன்ரியு என இவர் கால் பதித்த தளங்கள் ஏராளம்.

தமிழ் இலக்கியத்தில் மோனைக்கூ, எதுகைக்கூ, மூன்றியோ, முரண்கூ, போதனைக்கூ போன்றவைகள் முதன்முதலில் நூல் வடிவமாக பெற்றது இவரது எழுத்துக்களில்தான்.

இவரது கவிதை நூல்களை இது வரை பதினெட்டு மாணவர்கள் பி.எச்.டி. மற்றும் எம்.பில் மாணவர்கள் ஆய்வு நூலாக ஏற்றுக்கொண்டு பட்டம் பெற்றுள்ளனர்.

கவியருவி, கவிமதி, தமிழருவி, கவிக் குயில், எழுத்து வித்தகர் என கிட்டத்தட்ட நூற்றி இருபத்தெட்டு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர் முனைவர் மரியதெரசா.

தமிழ்ச்சான்றோர்கள் பலர் பாராட்டி ஊக்கப்படுத்தியுள்ளார்கள். அவை மென் மேலும் எழுதத்தூண்டுகின்றன என்று இன்றும் தன் எழுத்துப் பயணத்தை தொடர்கின்றார். விரைவில் அடுத்த ஐம்பது நூல்களை வெளியிடும் பணியில் இறங்கியுள்ளார். பள்ளி, கல்லூரிகள் மற்றும் சமூக அமைப்புகள் பல இவரது படைப்புகளை மிகச்சிறந்த பரிசாக வழங்கி மகிழ்கின்றார்கள். காரைமகள் அறக்கட்டளை சார்பாக பல்வேறு நலத்திட்டங்களையும் மாணவர்களுக்கு வழங்கிவருகிறார். மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ள இவரது அன்பு உள்ளத்திற்கு பல்வேறு அமைப்பினர் விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளனர்.

ஒவ்வொரு மொழியிலும் இலக்கியங் களின் ஆளுமை, உணர்ச்சிகளின் தத்ரூபம் போன்றவை சிறந்து விளங்குகின்றன. அவற்றை வெளிக்கொணரும் நோக்கி லேயே இந்த மும்மொழியைக் கற்றுத் தேர்ந்தேன். தமிழின் சிறப்பை இதர மொழியினர் புரிந்துகொள்ள வேண்டும் என என்னால் ஆன சிறு முயற்சியை மேற்கொண்டுள்ளேன். மும்மொழியிலும் எனது இலக்கியம் பயணப்பட்டாலும் எனக்கு தாய்வீடு தமிழ் தான். எனவேதான் தமிழ் மொழியில் 100 நூல்களை என்னால் படைக்கமுடிந்தது. நான் நன்றி சொல்வது அந்த தமிழுக்குத்தான் என்கிறார் முனைவர் மரியதெரசா.

# ஏனிந்த மயக்கம்

காதலில் விழுந்து காலங்கள் மறந்தே திரிவதேனோ
மோதலில் முட்டி மோதியே சாவதும் சரிதானோ
காத தூரம் சென்றும் கனலாய் மனம் ஆவதுமேனோ
சாதனைகள் செய்ய ஆயிரமிருக்கு ஏனிந்த மயக்கமோ

குடும்பம் வாழ்வென்றான பின்னாலும் தனிமையோ
இடுப்பில் ஒன்று ஏக்கம்தீர ஏந்திட வேண்டாமோ
அடுப்படியில் நின்று துணைக்கு உதவிடலாமே
துடுப்பாக நின்று துயரம் தீர்க்காது ஏனிந்த மயக்கமோ

படிப்பில் பிடிப்பில்லாதானாலும் திறமையிருந்தால்
பிடிப்பாகத் துடிப்பாக தொழில் செய்வர் மகவுகள்
நடிப்பென்றெண்ணாது நயமான அறிவுரை சொல்லாது
விடியலாக விடாத தயக்கத்தோடு ஏனிந்த மயக்கமோ

வேலைகள் ஆயிரம் கொட்டிக் கிடக்கு உலகினிலே
சாலைகள் தோறும் சதிராடி நடந்திடுவதேனோ
ஆலைகள் ஆயிரம் தேடுகின்றன பணியாட்களை
சோலைகளாகும் வாழ்வு இன்னும் ஏனிந்த மயக்கமோ



**கவிஞர் ராம்க்ருஷ்**



# காதலெனும் பெருநெருப்பு

எல்லோர் முன்னும் ஒரு மலை இருக்கிறது
சிகரம் தொடும் இலக்கிருக்கிறது
மலை நமட்டுப் புன்னகையுடன்
ஏற முயற்சிப்பவர்களை
பார்த்துக்கொண்டிருக்கிறது

பலர்
அடிவாரங்களில் அலைந்தபடியிருக்க
சிலரே சிகரம் தொடும் முனைப்பில்

அவள்..
என்னிதயம் கவர்ந்த அவள்
தன்முன் பிரம்மாண்டமாய்
நின்ற மலையைக் கண்டு மிரளவில்லை

தன் சின்னஞ்சிறு பாதங்களால்
மலையுடன் மல்லுக்கட்ட முனைந்தாள்

கல்லும் கனிந்தது
அந்த சிறுமியைக்கண்டு
அது தடைக்கற்களையெல்லாம்
அவளுக்கு படிக்கற்களாக்கியது

பலர்
அண்ணாந்துபார்க்கும் மலை
மலையோ
அவளை தன் தோளில் உட்காரவைத்தது
அவள் உலகை பார்க்கும்முன்
உலகம் அவளை பார்க்கவைத்தது
உச்ச நட்சத்திரமாக ஒளிர்ந்தாளவள்

அணுஅணுவாய்
சாவதென முடிவெடுத்தபிறகு
காதல் அதற்கு நல்லவழி என்பார்
அறிவுமதி

அவளும் அந்தப் பாதையை
தேர்வு செய்தாள்
அந்தப் பாதையில் அன்பு மட்டுமில்லை
நம்பிக்கை துரோகமும் இருந்தது
எதிரிகளை எதிர்கொள்ள முடிந்த
அவளால்
துரோகிகளை எதிர்கொள்ள
முடியவில்லை

அவள் பார்வதியாக நடித்தாள்
பெண் தேவதாசாக வாழ்ந்தாள்

மற்றவர்கள் மட்டுமே
அவளை ஏமாற்றவில்லை
அவள் தன்னையே
ஏமாற்றிக்கொண்டாள்

மதுவை
அவள் குடிக்கத் தொடங்கினாள்
பிறகு
மது அவளைக் குடித்து முடித்தது

வீழ்ச்சிகூட
வெற்றியாக சிலருக்கு மட்டுமே மாறும்
அவளுக்கும்.

**சக்திஅருளானந்தம்,**

சேலம்.

# லெட்சுமி பாட்டி

பதினஞ்சு வயசாவுது..
ஆட்டத்தக் கொறனா
கேக்குறியா...
ஊரொலகம் என்னத்தான
கரிச்சுக் கொட்டுதுனு
ஆத்தா செல்லாயி கத்துறத
கேட்டுங் கேக்காதது போல
குடுகுடுனு ஓடுன
லெட்சுமி சடக்குனு நின்னுட்டா..

ஓங்கு தாங்கா ஒசரமா நிக்குற
இநதக் கருப்பசாமி யாருடானு...
ஐயாவப் பார்க்க
ஒன்னக் கட்டிக்கப் போறவரு தாயினு
சொன்னதக் கேட்டு
தெகச்சுதான் நின்னா...

ஊரு மெச்ச நடத்தக் கல்யாணம்
ஆசப்பட்ட அத்தியானோட
அம்சமான குடித்தனம்..
அரசபுரசலா ஆயிரஞ்
சண்டை வந்தாலும்
அன்புக்குப் பஞ்சமில்ல..
பெத்தது ஒம்போது...
எமனுக்கு மூனு போக
மிஞ்சுனது ஆறு..

ஆறையும் கட்டிக் கொடுத்து
ஆளுக்கு நாலு பிள்ளைக..
குண்டுங் குலுவானுமா வீ
டு நெறஞ்சு பேரப்புள்ளைக...
சந்தோசத்துல பொங்கிப் போயி
ஊர் நாட்டாமை பண்ணிக்கிட்டு
பொழுத ஓட்டினவ..

பெத்தது அத்தனையும்
தெசைக்கொன்னா செதறிப்போக
ஏன்னு கேட்கவும் நாதியத்து
ஏக்கத்தச் சொல்லவும் வழியத்து
ஒத்தாளா உசுரச் சொமக்குறா லெட்சுமி...

- அன்புச்செல்வி சுப்புராஜூ

கூடடைதல்
நோய்மைக் காலங்களில்
நினைவு மங்கி சோர்வுறும்
தன்னுணர்வற்ற கையறுநிலையில்
உனது நினைவுப்பரப்புகள்
இடம் பெயர்கின்றன....
நனவு நிலையிலிருந்து
நனவிலி தளத்திற்கு....
திசைவெளி எங்கும்
திரிந்தலையும்
பறவைக்குத் தெரியும்
தானடையும் கூடு
நனவும் நனவிலியும்
உனது வெளியும்
உறைவிடமும்...

**- முனைவர். இரா.இந்துபாலா**

உதவிப்பேராசியர்,
திருவள்ளுவர் கல்லூரி,
பாபநாசம் - 627425

# ஹைக்கூ

மரப்பாச்சி பொம்மை
நடக்க ஆரம்பித்ததும் எட்டியுதைக்கும்
விளையாடும் குழந்தை..!

தன்னம்பிக்கை இழந்தவனின்
கைகளை எப்போதும் இறுக்கும்
மந்திரக் கயிறு!

காகிதக் கப்பல்
கொட்டும் மழையில் உருண்டோடும்
தெருவாசியின் கோவணம்!

கொளுத்தும் வெயில்
இலையுதிர்த்த மரக்கிளுக்கிடையே
நீலவானம் ..!

கோடைக்காலம்
மரத்தடியில் அமர்ந்ததும் தலையில்
எறும்புகளுடன் இலைகள்!

எதிர்நீச்சல்
ஆர்ப்பரித்தோடும் நதியில்
துள்ளும் மீன்கள் ..!

**- மாதவன்**



# வாவா கண்ணா...

வான்முகில் நிறத்தோய்; கேட்க
வரம்பல ஈவோய்; தொங்குந்
தார்குழல் காற்ற சைக்கத்
தாவணி இழுப்போய் ஊதுஞ்
சீர்குழல் ஓசை தன்னில்
சிந்தையில் கலப்போய் ராதை
கூர்விழி சிக்கும் நேரம்
குறும்புகள் செய்வோய் வாவா

நஞ்சினால் மாறும் வண்ணம்
நால்திசை ஆழி யாகிக்
கஞ்சமுங் காத லிக்கும்
கனிவுடை எழிலோ சுற்றி
கொஞ்சிடுங் கோபி யர்கள்
கோர்த்துனை ஓடி ஆடித்
துஞ்சிடும் வியப்பைத் தாருந்
தூயதோர் அருளோ சொல்லாய்

எண்ணமே உன்னை எண்ணி
இவனுமோர் ராதை ஆனேன்
கன்னமே கிள்ளிப் பார்க்கக்
கனிவுடன் வாவா கண்ணா
கண்துளை மூங்கில் ஆகிக்
காதலே உன்மேல் கொண்டேன்
என்துயர் தீர்க்கும் வண்ணம்
இதயமும் தாங்க வாவா

பெண்துகில் உரிந்த நேரம்
பேதமை பாரா தங்கே
முன்னருள் செய்தே காத்த
மூச்செனும் பார்த்தா உன்னை
என்துகில் கொண்டே நாளும்
இறக்கமே வாழ்வென் றானேன்
கண்துயில் போதும் என்னை
காத்திட வாவா கண்ணா

மண்ணுள வாயில் இந்த
மாபெரும் அண்டங் கொண்டும்
என்னுளம் அதற்குள் உண்டு
இதையுமே கொஞ்சம் பாராய்
உன்னுளம் இனிக்கும் வண்ணம்
ஓதுவேன் பாடல் நூறு
பொன்னுளத் தானே வாவா
பொழுதெலாம் காத்தேன் வாவா

– ஏடு வரதராசன்






## நூல் அறிமுகம்

## பேரா.பெ.விஜயகுமார்

அறிவியலின் பின் அணிவகுப்போம்
ஆசிரியர்: பேரா.கே.ராஜு

வெளியீடு : மதுரை திருமாறன் வெளியீட்டகம், தி.நகர், சென்னை-17.

78717 80923 / 94437 22311
விலை: ரூ.150

பேராசிரியர் ராஜு தமிழகத்தின் முக்கியமான கல்லூரி ஆசிரியர் சங்கமான மூட்டா பேரியக்கத்தை தலைமையேற்று நடத்திச் சென்ற தலைவர்களுள் ஒருவர். மூட்டா ராஜு என்றே எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படுபவர். விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரி இயற்பியல் துறையில் முப்பதாண்டுகளுக்கும் மேலாக ஆசிரியப் பணியாற்றி அறிவார்ந்த அறிவியல் மாணவர்களை உருவாக்கியவர். பணிஓய்வுக்குப்பின்`புதியஆசிரியன்எனும் மாத இதழின் ஆசிரியராக இருப்பதுடன் தீக்கதிர் நாளிதழில் ''அறிவியல் கதிர்'' என்ற தலைப்பில் தொடர்ந்து கட்டுரைகள் படைத்து அறிவியல் புதிர்களை சாதாரண வாசகர்களுக்கு எடுத்துச் செல்லும் உன்னத பணியைச் செய்து வந்தவர். கட்டுரைகளை ஒரு சேர படிப்பதற்கு ஏதுவாக நூல் வடிவிலும் கொண்டு வருகிறார். அந்த வகையில் “அறிவியலின் பின் அணிவகுப்போம்” நூல் அவரின் ஏழாவது தொகுப்பாகும்.

ஜே.டி.பெர்னால்,ஹால்டேன்போன்ற அறிவியலாளர்கள் வழியில் பேராசிரியர் ராஜுவும் அறிவியல் என்பது ஆய்வரங்கத்தில் பூட்டி வைக்கப்படும் காட்சிப் பொருள் அல்ல, மானுடர்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் அறிவியல் உண்மைகளை எளிமையான மொழியில் விளக்கிட வேண்டும் என்றகருத்தில்அசையாதநம்பிக்கைஉள்ளவர். அதிலும் குறிப்பாக மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்து போயிருக்கும் இந்தியச் சமூகத்தை இருளிலிருந்து மீட்டெடுக்க அறிவியல் ஒளி பாய்ச்சிட வேண்டிய பொறுப்பு அறிவியல் ஆசிரியர்களுக்கு உண்டு என்பதை வலியுறுத்துபவர். “அறிவியலின் பின் அணிவகுப்போம்” என்ற தலைப்பே அவரின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறது.

இந்நூலில் படிப்பதற்கு எளிமை யானதாகவும், இனிமையானதாகவுமான 51 கட்டுரைகள் உள்ளன. இயற்பியல், வானவியல், உயிரியல், வேதியியல், சுற்றுச் சூழலியல், என்று அனைத்து அறிவியல் பற்றிய செய்திகளும் உள்ளன. அறிவியல் போராளி பார்கவா, விண்ணை அளந்த விஞ்ஞானி யு.ஆர்.ராவ், அறிவியலைச் சாமானியர்களிடம் கொண்டு சென்ற விஞ்ஞானியஷ்பால்,இந்தியாவில்அறிவியல் விழிப்புணர்விற்கு வித்திட்ட ஸ்வர்ணகுமாரி

தேவி போன்ற அறிவியலாளர்கள் ஆற்றிய பங்கினை விளக்கும் கட்டுரைகளும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22ஆம் நாள் நடத்தப்படும் அறிவியலுக்கான அணிவகுப்பு குறித்த இரண்டு கட்டுரைகள் காத்திரமானவை. எதற்கும் அறிவியல் அடிப்படையிலான நிரூபணம் தேவையில்லை என்றாகிவிட்ட இந்தியாவில் அறிவியல் பேரணியை என்றோ ஒரு நாள் நடத்தினால் மட்டும் போதாது. அறிவியலுக்குரிய சிம்மாசனத்தைத் தர நாம் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்ற ஆசிரியரின் கூற்று இன்றைய இந்திய அறிவியலுக்கு எதிரான சூழலை பளிச்சென்று விளக்குகிறது.

நிலத்திலும், ஆழ்கடலிலும் வாழும் உயிரினங்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள ஆபத்தைஇருகட்டுரைகளில்விவரித்துள்ளார். ஒருவரது உடல் நலனையும், மன நலனையும் பராமரிப்பதற்கு இசையைப் பயன்படுத்த முடியும் என்ற அறிவியல் உண்மை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. முத்தாய்ப்பாக வந்துள்ள «தண்ணீர் மனிதர்» ராஜேந்திர சிங் பற்றிய 51-வது கட்டுரை நீர் வளத்தைக் காக்கவும் மேம்படுத்தவும் அவர் கடைப்பிடித்த வழிமுறைகளை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டிய முத்தான யோசனைகள் அதில் பொதிந்துள்ளன.

நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள தமிழ்நாடு அறிவியல் இயக்க அலுவலக மேலாளர் பிராபகர், இந்நூல் வாசிப்போர் மனதைக் கவர்வதோடு நின்றுவிடாமல், அன்றாட வாழ்வில் அவர்கள் காணும் ஒவ்வொரு விஷயத்தையும் அறிவியல் பார்வையுடன் அணுக வகைசெய்யும் என்ற தன்னுடைய நம்பிக்கையை அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளது மிகச் சரியானது. மதுரை திருமாறன் வெளியீட்டகம் நூலினை பிழைகளின்றியும். கட்டுரைகளுக்கேற்ற பொருத்தமான படங்களுடனும் வெளி யிட்டுள்ளது பாராட்டுதலுக்குரியது.

# நாணிலு

முகவரியில்லை, மகிழ்ச்சியில்...
அனாதை இல்லம்.
தொலைத்தவர்கள், துக்கத்தில்...
முதியோர் இல்லம்.

செல்பேசியை ஏந்திய
கரங்கள் வலிக்கிறதாம்.
தாத்தாவிற்கு
கால் பிடிக்கும் சிறுவன்

நான் இப்பொழுது
தேவையில்லையாம்,
மழைக்காலத்தில்
என் ரோஜாவிற்கு.

பசிக்கென்று இட்ட பிச்சை
மதுவில் கரைகையிலே
எரிகிறது
இருவயிறும்.

சாதி ஒழிய வேண்டுமா
வளர வேண்டுமா?
ஏன் மீண்டும் மீண்டும்
விண்ணப்பப் படிவத்தில்?

**காரை. இரா. மேகலா**
காரைக்கால்

# தமிழும் தமிழர் நாடும்

எண்சீர் விருத்தம்.
காய்.. காய்.. மா.. தேமா


புவிதனிலே சிறந்திட்ட தமிழர் நாடு
புரட்சிகளும் விளைந்திட்ட பெருமை பாரீர்..!
கவிதனிலே கவிஞரெல்லாம் போற்றிப் பாடிக்
கருத்தெல்லாம் கூறியதும் எங்கள் நாடே..!
சிவிகையிலே ஏறிடுமன் னருக்கும் நல்ல
சிந்தனைகள் சொல்லியநற் கவிஞ ருண்டு..!
செவிதனிலே அணிந்திருக்கும் கம்மல் கூடச்
சேவலுக்கு இரையெனவே இட்ட துண்டு..!

மகளிருமே முறங்கொண்டே புலியை ஓட்டும்
மகத்தான வரலாறும் நடந்த துண்டு..!
புகழோடு மூவேந்தர் ஆண்ட மண்ணும்
புவிதனிலே எங்களது தமிழர் நாடே..!
அகலாத புகழினையே தேடி மன்னர்
ஆழியெல்லாம் கடந்திட்ட பெருமை யுண்டு..!
அகத்திலேயும் புறத்திலேயும் பாடல் கூறும்
அவனியிலே தமிழரது பெருமை பேசும்..!

பண்பாடு கொண்டிட்ட தமிழர் வாழும்
பழமைமிகு பெருமைசேர் மண்ணே யாகும்..!
மண்ணுலகில் புகழினையே பெற்ற நாடு
மகத்தான தமிழரது நாடே யென்போம்..!
கண்ணெனவே போற்றிடுவோம் தமிழை நாமே
கருத்தாக வாழ்ந்திடுவோம் பெருமை பொங்க..!
திண்ணமாகச் செப்பிடலாம் தமிழே மண்ணில்
சிறப்பான மொழியென்றே கொள்வோம் நாமே..!

**- அனுராஜ்**

# எனக்கும் ஆசைதான்



எனக்கும் ஆசைதான்
பெண்ணாகப் பிறப்பெடுத்தால்
பெருமதிப்பும் கூட வரும்
கண்ணாகக் காத்திடுவார்

கலையரசி நீயே என்பார்
கவிதைகளும் புனைந்திடுவார்
கற்கண்டும் நான் என்பார்
கண்கண்ட தெய்வமும் நானாவேன்

எங்கெங்கு சென்றாலும்
தனிமதிப்பும் தானுண்டு
தரத்தினிலே தங்கம் என்பார்
தலையில் பூச்சூடி மகிழ்ந்திடுவார்

வட்ட நிலவு என்பார்
விண்மீனும் நானெண்பார்
மலர்கின்ற பூவும் நானும் ஒன்றென்பார்
விடிகின்ற பொழுதாகவும் நானாவேன்

கண்ணசைவில் எண்ணம் நிறைவேறும்
வாயசைவில் கேட்டதும் கிடைக்கும்
பொன்னான பிறப்பாக பெண்ணாக நான்பிறக்க
நிறையவே எனக்கு ஆசை!

போதும் பிறவி.

இயந்திரமாய் ஆடவர் வாழ்க்கைப் போதும்
மத்தளம் போல் அடிமேல்அடி பட்டதும்போதும்

சுமைதாங்கியாய் எத்தனை காலங்கள் இருப்பதுநானும்
சிறிதேனும் எனக்கொரு சந்தோசம் வேணும்......

**- வா.சண்முகம்.**
கும்பகோணம்.

# ஹைக்கூ 2020 விழா

உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம் மற்றும் தமிழ்நெஞ்சம் பிரான்சு இணைந்து நடத்திய “ஹைக்கூ முப்பெரும் விழா“ சென்னை இக்சா அரங்கில் பிப்ரவரி 1, 2020 அன்று நடைபெற்றது. .துவக்க நிகழ்ச்சியாக விழாவிற்கு வந்திருந்த பெண் கவிஞர்கள் குத்துவிளக்கேற்றவும்.. முன்னதாக ஓவியக்கவிஞர் அமுதபாரதி தலைமையில் நாற்பத்தி நான்கு கவிஞர்கள் தமது ஹைக்கூ கவிதைகளைவாசித்தனர். ஹைக்கூ கவிதைகள் சுருங்கச் சொல்லி சூழலை விளக்கும் எளிய சொற்களோடு இருக்கவேண்டும் என ஓவியக் கவிஞர் அமுதபாரதி பேசினார். கவிஞர் கண்ணதாசன் அவர்களுடனான நெருங்கிய நாட்களை நினைவு கூர்ந்து அனைவரையும் நெகிழச் செய்தார் கவிஞர் அமுதபாரதி. உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றத்தின் நிறுவனத் தலைவர் கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ஹைக்கூ வரலாற்றில் பெருமளவில் ஹைக்கூ கவிஞர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் இதுவே என்றும் பேசினார்.






விழாவில்“தமிழ்நெஞ்சம் - பிரான்ஸ் பதிப்பகத்தில் கவிஞர் அனுராஜ் மற்றும் தமிழ்நெஞ்சம் அமின் ஆகியோர் தொகுத்த “ஹைக்கூ 2020“ - 101 கவிஞர்களின் 2020 ஹைக்கூ கவிதைகளின் தொகுப்பு நூலினை கவிபேரருவி ஈரோடு தமிழன்பன் அவர்கள் வெளியிட புரவலர் குமரன் அம்பிகா அவர்கள் பெற்றுக்கொண்டார். அவருடன்இணைந்துசிறந்தகல்வியாளரும் எழுத்தாளருமான நெல்லை உலகம்மா அவர்களும் பெற்றுக்கொண்டார்.




உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம் தலைவர் காநகல்யாணசுந்தரம் மற்றும் பிரான்சு தமிழ்நெஞ்சம் அமின் ஆகியோர் இணைந்து, ஜப்பானிய ஹைக்கூ பிதாமகர் பாஷோ அவர்களின் பெயரில் கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கு“பாஷோ விருது“ வழங்கினர். அப்போது.. அரங்கில் விழாவுக்கு வந்திருந்தோர் வாழ்த்து முழக்கமிட்டது மெய்சிலிக்க வைத்தது






பாஷோ விருதுபெற்ற ஈரோடு தமிழன்பன் அவர்கள் தமிழ் ஹைக்கூவின் தற்கால வளர்ச்சிகுறித்து சிறப்பித்து கருத்துறையிட்டார் மாகவி ஈரோடு தமிழன்பன் தன் சிறப்புரையில் எது ஹைகூ? ஹைகூவை எப்படி எழுதவேண்டும்? ஹைகூவில் இடம்பெறக் கூடாதவை












எவை எவை? என்பதை தமக்கே உண்டான பாணியில் ஒரு மணிநேரம் சொற்பொழிவு நடத்தினார். அவையினர் அவ்வப்போது கைத்தட்டலுடன் கேட்டு ரசித்தனர். அவரது பேச்சாற்றலில் மயங்கி நீண்டநேரம் ஹைக்கூவின் நிலைப்பாட்டை அதன் வசீகரத்தன்மையை உள்வாங்கியபடி அவையே மயங்கிக் கிடந்தது. இதைத் தொடர்ந்துபடைப்பாளர்களுக்குவிருதுகளும் சான்றிதழ்களும் நினைவுப்பரிசுகளும் வழங்கினார்.

முன்னதாக தலைமை வகித்த நக்கீரன் குழும இனிய உதயம் இதழின் இணையாசிரியர் கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் அவர்கள் தலைமை உரையாற்றினார். தமது உரையில் இன்று படைப்பாளர்களுக்கும் தமிழுக்கும் நேர்ந்திருக்கும் நெருக்கடிகளைத் தொட்டுக்காட்டி, இலக்கிய முன்னோடிப் படைப்பாளர்களான கவிக்கோ அப்துல்









ரகுமான், மு.மேத்தா, ஈரோடு தமிழன்பன் ஆகியோருக்கிடையில் இருந்த அன்பான இதயப் பிணைப்பையும் சுருக்கமாகச் சொல்லி, இவர்களிடம் இத்தகைய பண்பினைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று படைப்பாளிகளைக் கேட்டுக்கொண்டார்.




ஹைக்கூ 2020 நூல் தொகுப்பாளர் கவிஞர் அனுராஜ் அவர்கள் ஏற்புரை வழங்கினார். நஸீரா எஸ். ஆப்தீன் இலங்கை கவிஞர் எழுதிய ஹைக்கூவில்_ கரைவோமா, நிர்மலா சிவராசசிங்கம் எழுதிய ஓடைநிலா, செல்லம் ரகு எழுதிய இனியெல்லாம் சுகமே, மாதவன் எழுதிய சுகமூட்டிய அந்த நிழல் இலங்கை கவிஞரும்.. எழுத்தாளருமான கோவுஸ்ஸ கே. ராம்ஜி உலகநாதன் எழுதிய கொழுந்தம்மா சிறுகதை நூல், பாடலாசிரியர் சாந்தரூபி அம்பாளடியாள் எழுதிய என்னுயிர்க் கீதங்கள் (101 பாடல்களின் தொகுப்பு) அன்புச் செல்வி சுப்புராஜூ அவர்களின் துளிர்க்கும் மரம் இரண்டாம் பதிப்பு அறிமுகம்..




நிறைமதி நீலமேகம் அவர்களின் நிலவின் நினைவலைகள் இத்துடன்.. அமிழ்தத் தமிழ் இலக்கியத் தழல் எனும் இலக்கிய அமைப்பு அறிமுகப் படுத்தப் பட்டதோடு.. இவ்வமைப்பின் முதல் பணியாக தமிழ்ச்செம்மல் கவிரிசி மகேசு

















எழுதிய தமிழ் நதியில் என் கவி ஓடம் எனும் கவிதை நூலும் வெளியிடப்பட்டது. முன்னதாக தமிழ்நெஞ்சம் இதழ் சார்பாக இலங்கைக்கவிஞர் நஸீரா எஸ். ஆபிதீன் அவர்களுக்கு மணிக்கூ கவி விருதினை ஈரோடு தமிழன்பன் வழங்கினார். கவித்தென்றல் விருதினை எழுத்தாளர் கோவுஸ்ஸ இராம்ஜி உலகநாதனுக்கு இனிய உதயம் இணையாசிரியர் ஆரூர் தமிழ்நாடன் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள் .

ஹைக்கூ 2020 நூலில் பங்கேற்ற கவிஞர்கள் அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழும், தொகுப்பாளர்களுக்கு நினைவுப் பரிசும்... உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம் நடத்திய மாதாந்திரப் போட்டிகளில். வென்றவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டதோடு.. விழாவை ஒருங்கிணைத்து மிகச்சிறப்பாக














நடத்திய தமிழ்நெஞ்சம் அமின்.. கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்.. கவிஞர் அனுராஜ் ஆகியோருக்கும் நினைவு பரிசு சான்று வழங்கப்பட்டதோடு மூவருக்கும் புத்தொளி இலக்கிய குழுமம் விருதுகள் முறையே... தமிழ் தீபகம் விருது... தன்முனைக் கவி தீபகம் விருது.. ஹைக்கூ தீபகம் விருதுகளை புத்தொளி குழும நிறுவனர் நஸீரா எஸ். ஆபிதீன் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்கள்..

விழாவில் இலங்கைக் கவிஞர்கள் காவத்தையூர் பழனியாண்டி கனகராஜா, நஸீரா எஸ். ஆபிதீன், சசிநூரா, வபிரா வபி, இராம்ஜி கே.உலகநாதன் ஆகியோர் கலந்துகொண்டுநூல்களைவெளியிட்டனர். கவி ஓவியா இலக்கிய மன்றத்தின் தலைவர் மயிலாடுதுறை இளையபாரதி, மழலைக் கவிஞர் கன்னிக்கோவில் ராஜா, தஞ்சைத் தமிழ் மன்றத் தலைவர் இராம வேல்முருகன், கவியுலகப் பூஞ்சோலை நிர்வாகி தென்றல்














கவி. பட்டிமன்ற பேச்சாளர் அன்புவல்லி தங்கவேலன், எழுத்தாளர் தஞ்சை எழிலன், வடசென்னைத் தமிழ்ச்சங்க நிர்வாகி நா.கருணாநிதி, பாடலாசிரியர் இந்துமதி பக்கிரிசாமி, தினத்தந்தி எழுத்தாளர் அமுதன், உலழள குழும நிர்வாகி பிரபு வாய்ஸ், ஹைக்கூ கேலக்சி நிர்வாகி பொம்மிடி மோகன்தாஸ், மற்றும் கவிஞர்கள் ஓசூர் மணிமேகலை, இளையபாரதி கந்தகப்பூக்கள், நாகை ஆசைத்தம்பி, உதயக்கண்ணன், தமிழமுதன், லதா சந்துரு, செல்லம் ரகு , நிறைமதி நீலமேகம், மாதவன், வைகை பாரதி, கனகா பாலன், லாரன்ஸ் குமார், கவிநிலா மோகன், பாரியன்பன் நாகராஜன், கவிமுத்து, த.அதியமான், ச.ப.சண்முகம், தட்சணா மூர்த்தி, தங்கைபாலா ஆசினி, மணவை கார்னிகன், யுகபுத்திரன், பொன்னம்பல வாணன், புதுகை தீஇரா, கவிஞர்.ரேவதி, சிவகாமசுந்தரி நாகமணி, அன்புச்செல்வி சுப்புராஜு, .ஈழவன் தாசன், குமர. தர்மசீலன், இலியாஸ்அகமது, தேவாமங்கலம் இராமு, கவிஞர்.மல்லிகைதாசன், செ. தமிழ்ச்செல்வன், கேதீஸ்வரன் சிதம்பரம், தொ.வீரமணி, உறையூர். வா.மகேஷ், வலம்புரி லேனா, கீர்த்தி கிருஷ், லட்சுமி கார்த்திகேயன், அன்பழகன் ஜி., ஜென்ஸி, கே.பாலன், சு.கேசவன், ரபீந்தர்நாத் மற்றும் உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம் உறுப்பினர்கள் நூற்றுக்கும்


















மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.. பிரான்சு தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் விழாவின் இறுதியில் அனைவருக்கும் நன்றிகூறினார்.

உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்ற விழா.... ஹைக்கூ பறவைகளின் வேடந்தாங்கல் சரணாலயமானது .

நிகழ்வு பற்றிய தொகுப்பு
**கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்,**
சென்னை






பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
மார்ச் 2019

# நனவாகும் கனவு!

இளமையின் கனவுகள் இனிமையாய்த் தொடர்ந்திட
உளமது மகிழ்ந்திடும் உன்மத்தக் கனவுகள்!
முதுமையில் கனவுகள் அசைபோடும் கடந்ததை!
புதுமையாய்க் கண்டிட புரிதலும் தேவையே!
இடைப்பட்ட வாழ்விலே எத்தனைக் கனவுகள்!
தடையாக சிலநேரம் உடைந்துதான் சிதறிடும் !
சாதனைக் கனவுகள் சரித்திரம் படைத்திடும்!
ஆதலால் காணுவோம் அற்புதக் கனவுகள்!
பகல்கனவில் வீணே இழக்கின்றோம் வாழ்வை!
பரிதவிக்கும் மானுடம் விழித்திட வேண்டுமே!
கனவுகள் மட்டுமே கொடுத்திடாது வெற்றியை!
கனவின் விழிப்பே உணர்த்திடும் நிசத்தை!
உயர்வினைத் தந்திடும் உன்னத உழைப்பே !
முயற்சியும் இன்றியே முடங்கினால் தீமையே!
தன்மதிப்பை உணராது தவித்திடும் மானிடா !
கண்விழித்துப் பாரடா கனவெல்லாம் நனவாகும்!

**ஓசூர் மணிமேகலை**

